# சங்ககால பண்பாட்டு மரபுகளை இன்றும் தொடரும் வரணி மாசேரி புராதன குருநாதர் கோயில் - ஓர் ஆய்வு

**சி.கா.கமலநாதன்**[1]

## ஆய்வுச்சுருக்கம்:

*தமிழர்களது பண்பாட்டுக் கூறுகளின் வளர்ச்சியில் தொடக்கமாக விளங்குவது சங்ககாலமாகும். தமிழகத்தில் சங்கம் அமைத்து அறிவுடைநிலையில் தமிழ் வளர்ந்தது இக்காலமாகும். இதற்குரிய பண்பாடு, அயற்பிரதேசங்கள் எங்கும் வேரூன்றியது. அவ்வகையில் ஈழத்திருநாட்டிலும் செல்வாக்குப் பெற்றதை ஆதாரங்கள் உறுதி செய்கின்றன. ஈழம் முழுவதும் பரவிய போதும் வரணியில் அவை ஆழமாக ஊடுருவி இன்றுவரை பேணப்படுவதை புராதன குருநாதர் கோயிலில் அவதானிக்க முடிகிறது. அதனை வெளிக்கொண்டு வருவதே இந்த ஆய்வின் நோக்கமாகும். இந்த ஆய்விற்கு இந்திய ஈழத்து இலக்கிய மூலாதாரங்கள், ஆய்வுக் கட்டுரைகள், தொல்பொருட்சான்றுகள், நேர்காணல், களஆய்வுத்தகவல்கள் சான்றாதாரமாகின்றன. இது ஒரு வரலாற்றுப் பண்பாட்டாய்வாகவும் ஒப்பீட்டு விபரண ஆய்வாகவும் விளங்குகிறது. இது ஓர் ஆவணப்படுத்தல் ஆய்வாகவும் உள்ளது. மேலும் தமிழகப் பண்பாடுகள் ஈழத்தின் பூர்வீகக் குடிகளான நாகர்களுடைய பண்பாடுகளுடன் இணைந்து வளர்ந்ததையும் இவ்வாய்வின் மூலம் அறிய முடிகின்றது. மேற்குறிப்பிட்ட வகையிலே வரணியானது இத்தொடர்பில் தனித்துவமான இடத்தைப் பெறுவதை அவதானிக்கலாம். குறிப்பாக பெருங்கற்கால, சங்ககாலப் பண்பாடுகளை வரணி, மாசேரி புராதன குருநாதர் கோயில் காலம் காலமாக பேணிவருவதை இந்த ஆய்வின் மூலம் தெளிவாக அறியமுடிகிறது. மேலும் இத்தொடர்பு நீண்ட பரிமாணத்தை உடையதை அவதானிக்கலாம். இந்த ஆலயத்தில் ஐம்பதிற்கு மேற்பட்ட வெள்ளிவேல்களை வாழைக்காயில் குற்றி மயில்தோகை விரித்திருப்பது போல வழிபடுகின்றனர். அவற்றுள் பல்லவர் காலத்திற்குரிய கூர்நீளமான வேல்கள் உள்ளன. மாசேரி என்ற பெயர், மற்றும் ஆதியில் கோயில் இருந்த இடத்தில் சோழர் நாணயம் கிடைத்தமை, இவ்வாலயத்தை வேளைக்காரப்படையும் பூசித்ததைக் குறிக்கும் சோழன் மாசேரி, வேளையார்புலம் எனும் இடப்பெயர்கள், கோயிலுள்ள புராதன சோழர்கால வெண்கலச்செம்பு போன்ற பல சான்றுகள் உள்ளன. மேலும் நாயக்கர் மரபில் பிரசித்தி பெற்றதை அக்காலத்தில் வரையப்பெற்ற திரைசீலை ஓவியம் சான்றாதாரத்துடன் விளக்கி நிற்கிறது. மேலும் வரணிக்கும் வேதாரண்யத்திற்குமான தொடர்பு சரபோஜி மகாராஜா காலத்தில் தில்லைநாயகத் தம்பிரானால் வரணி ஆதீன உருவாக்கமும், சிதம்பரத்தில் வரணி மடம் உருவானமை, சிதம்பரத்திற்கு வரணியில் இருந்த 2000 பரப்பிற்கு கூடிய வயல் நிலங்கள் என்றவாறான தொடர்புகள் காலத்திற்கு காலம் விரிவடைந்தமையைக் காணலாம். எனவே புராதன குருநாதர் கோயில் பெருங்கற்காலம், சங்ககாலம், சங்கமருவிய காலம், பல்லவர் காலம், சோழர் காலம், நாயக்கர் காலம், ஐரோப்பியர் காலம் என எல்லாக் காலங்களிலும் தமிழக ஈழ உறவில் முக்கியம் பெற்றதுடன் இன்றுவரை சங்ககால, நாகமரபுகளைப் பேணி வருகின்றது என்றால் அதுமிகையன்று. எனவே தமிழக இலங்கைப் பண்பாட்டு உறவில் வரணி மாசேரி புராதன குருநாதர் கோயில் தனித்துவமான ஓர் இடத்தைப் பெறுவதைக் காணலாம். மேலும் சங்க காலத்தைத் தொடர்ந்து தமிழகத்திலிருந்து ஈழத்தில் செல்வாக்குச் செலுத்திய பல்லவர், சோழர், நாயக்கர் போன்றவர்களது ஆட்சியிலும் அப்பண்பாடுகள் இணைந்து இன்றும் நிலைபெற்றுள்ள தன்மையை அறியவும், மேலும் பல ஆய்வுகளைச் செய்யவும் இந்த ஆய்வு திறவுகோலாக அமைகிறது.*

**திறவுச்சொற்கள்:** சங்ககாலம், பண்பாடு, குருநாதர்கோயில், தமிழகம், ஈழம், வரணி

[1] *சமூகவிஞ்ஞானத்துறை, ஸ்ரீபாத தேசிய கல்வியியற் கல்லூரி, பத்தனை.*
*kkamalsuba@gmail.com*

**அறிமுகம்**

தமிழக வரலாற்றிலே சங்ககாலமென்பது கி.மு 3ஆம் நூற்றாண்டிற்கும் கி.பி. 3ஆம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்டது என்பது வரலாற்றாசிரியரது கணிப்பாகும். (பத்மநாதன்,சி., 2007:15) இக்கால வரலாற்றினை அறிந்து கொள்ள சங்க இலக்கியங்களான பத்துப்பாட்டு, எட்டுத்தொகை நூல்களும் தொல்காப்பியம் எனும் இலக்கணநூலும் அண்மைக்கால தொல்லியலாய்வும் முக்கிய சான்றாதாரங்களாக விளங்குகின்றன. அவற்றைக் கொண்டு பார்க்கும் போது இலங்கைக்கும் சங்ககால தமிழகத்திற்குமிடையில் அதிகமான அரசியல், பொருளாதார பண்பாட்டு தொடர்புகள் இருந்ததை தெளிவாக அறிய முடிகின்றது. குமரிக்கண்டம் பற்றிய ஆய்வுகளுடனும் ஈழத்திருநாடு இணைத்துப் பார்க்கப்படுவதையும் இவ்விடத்தில் சுட்டிக் காட்டலாம் (பாலசுப்பிரமணியம், கு.வெ., 1994:). அவ்வாறான வரலாற்றுத் தொடர்புகளின் போது சங்ககாலப் பண்பாடுகள் இலங்கையில் நிலைபெற்றதுடன் ஈழத்திலிருந்த ஆதிக்குடிகளான நாகர்களுடன் பரஸ்பரம் கலப்புற்று அவை தொடர்ந்து பின்பற்றப்பட்டமையை அறிய முடிகின்றது. அதனைத் தற்காலத்தில் பலசான்றுகள் மூலம் ஆய்வு செய்து நிறுவமுடிகின்றது. அந்தவகையிலேயே யாழ்ப்பாண மாவட்டத்தில் வரலாற்றுப் பிரசித்தி பெற்ற தென்மராட்சியில் வரணி, மாசேரி (J/340) கிராமசேவையாளர் பிரிவில் அமைந்துள்ள புராதன குருநாதர் கோயில் பல நூற்றாண்டுகளாக மரபுமாறாது பரம்பரை பரம்பரையாகப் பேணிவரும் வழிபாட்டு மரபுகள் சங்காலப் பண்பாட்டின் தொடர்ச்சியாக அமைவதைக்காண முடிகின்றது. இவ்வாலயம் வரலாற்றுப் பிரசித்திபெற்ற வல்லிபுரக்கோயில், நாகர்கோயில், வரணி என்பவற்றை இணைத்த முக்கோணப் பிரதேசத்தின் மத்தியில் அமைந்திருப்பதைக் காணலாம். வரணிச் சந்தியிலிருந்து குடத்தனை செல்லும் வீதியில் மாசேரிக் கிராமத்தின் கிழக்காக அமைந்துள்ளது. இப்பிரதேசத்தில் சங்ககால நில அமைப்புக்களில் கிழக்காக காடும் காடுசார்ந்த முல்லை நிலமும் மேற்காக வயலும் வயல்சார்ந்த மருதநிலமும் வடக்கே தொண்டமனாறு, முள்ளியான் குடாரப்பு, ஆனையிறவு வரையான நீரேரியும் அதனுடன் இணைந்த கடலும் கடல்சார்ந்த நெய்தல் நிலமும் இடையில் மணலும் மணல்சார்ந்த பாலை நிலமும் காணப்படுகிறது. குறிஞ்சி நிலம் இல்லாத போதும் அவ்விடத்தைப் பிரதிபலிக்கக்கூடிய இப்பழைமையான முருகன் ஆலயம் அமைந்துள்ளது. தலம் அமைந்த இடம் வீராணுரி என்றும் மூர்த்தி - குருநாதர், தலவிருட்சம் - பூவரசு, தீர்த்தம் - சிவசண்முகநாக தீர்த்தம் என்றவாறு மூர்த்தி, தல, தீர்த்த விசேடமுடைய சித்தர் சமாதியுடனான கோயிலாக இது அமைந்துள்ளது. (கமலநாதன், சி.கா., 2012)

**சங்ககாலத்து ஈழத்தொடர்புகள்**

இலங்கைக்கும் தமிழகத்திற்குமிருந்த தொடர்பு மிகத் தொன்மையானது. இடைப்படு கடலின்றி எல்லாம் நிலமாகவே இருந்ததென அர்த்தசாஸ்த்திரம், இண்டிகா, இதிகாச புராணங்கள், மகாவம்சம், சங்க இலக்கியங்கள் ஆகிய நூல்களில் குறிப்பிடப்படுகிறது.

மேலும் இவை தமிழகத்திற்கும் இலங்கைக்கும் இருந்த தொடர்பை நன்கு விளக்குகின்றன. இவற்றை உறுதிப்படுத்தும் வகையில் அண்மைக்காலத்தில் கிடைக்கும் தொல்லியல் சான்றுகளும் முக்கியம் பெறுகின்றன. விஜயன் வழியாக ஆரியர் இலங்கையிற் குடியேறும் முன்பே இங்கு வாழ்ந்த பழங்குடியினர் தமிழ்க்கிளை வழியினர் என அறியப்படுகிறது. இப்பழங்குடியினர் முருக வழிபாடு செய்தனர் என்றும் கதிர்காமத்திலுள்ள முருகன் கோயில் இன்னோரின் உடைமை என்றும், இழந்த இவ்வுரிமையை எல்லாளன் இவர்க்கு மீண்டும் அளித்தனன் என்றும், துட்டகாமினியும் இதனை மதித்து வந்ததாகக் கருதப்படுகிறது. அவனின் பின்பு ஆட்சிக்குவந்த கஜபாகு வேந்தன் சேரன் செங்குட்டுவன் காலத்தில் தமிழகத்தில் நடைபெற்ற கண்ணகிக் கோட்ட வழிபாட்டில் அவன் கலந்து கொண்டதை சிலப்பதிகாரத்தின் மூலம் அறியமுடிகின்றது. அவனால் ஈழத்தில் கண்ணகி வழிபாடு அறிமுகப்படுத்தப்பட்டது. சேனன், குட்டகன் எனப்பெறும் தமிழர் இருவர் அனுராதபுரத்தைக் கைப்பற்றி இருபது ஆண்டுகள் ஆண்டனர். எல்லாளன் 44 வருடம் நீதிநெறிதவறாது ஆட்சி செய்தான். இவன் சோழ இளவரசன் எனக் கருதப்படுகிறது. இவன் காலத்தில் தமிழ் நல்ல வளர்ச்சி பெற்றிருந்தது. தமிழ்ப்படைவீரர் பலரும் வணிகர் பலரும் எல்லாளன் காலத்தில் இலங்கை வந்ததாக கூறப்படுகிறது. அனுராதபுரத்தில் கிடைத்த கி.மு இரண்டாம் நூற்றாண்டினதான கல்வெட்டொன்று தமிழ் வணிகக்குழு வொன்றைக் குறிப்பிடுகிறது. (பாலசுப்பிரமணியன், கு.வெ., 1994)

மதுரையில் நிலவிய தமிழ்ச் சங்கத்தில் ஈழநாட்டின் தமிழ்ப்புலவர் ஒருவர் பங்கேற்றதாகக் கூறப்படுகிறது. (கிருஸ்ணராசா,செ., 2015:216-232) அவரே ஈழத்துப்பூதன் தேவனார் என்று கூறுவர். மெகஸ்தனிஸ் ஈழத்தை தப்ரோபணி (Tapropanis) என்று குறிப்பிட்டுத்தரும் தகவல்கள் அக்காலத்தொடர்பில் மிகவும் முக்கியமானவை தமிழகத்தோடு இலங்கை குதிரை வாணிகம் செய்துள்ளமை அறியப்படுகிறது. (புஸ்பரட்ணம், ப., 2003) ஹிப்பலாஸ் என்ற கிரேக்கப் பயணி பருவக்காற்றின் திசை வீச்சைக் கண்டறிந்த கி.மு முதல் நூற்றாண்டில் உரோம நாட்டினர் இலங்கைப் பொருட்களைத் தமிழகத் துறைமுகங்களிலிருந்து பெற்றிருக்கின்றனர். கிளாடியஸ் சீசர் காலத்தில் ஈழத்திலிருந்து அரசியல் தூதர்கள் உரோம நாட்டிற்கு அனுப்பப்பட்டிருக்கின்றனர். ஈழத்துணவும் காழகத்தாக்கமும் தமிழகத் துறைமுகத்துக்கு வந்தன என்பார் பட்டினப்பாலை ஆசிரியர் (வையாபுரிப்புள்ளை, எஸ்.1967,ப.ஆ) அசோகர் காலத்தில் தமிழகத்தில் வழங்கிய தென்பிராமியின் வரிவடிவம் பெற்றிருந்த மாற்றங்களைக் கருத்திற் கொண்டு இலங்கையின் பழைய பாலிமொழி நூல்கள் அதனைத் தமிழி என வழங்கியுள்ளன. எருக்காட்டூர் ஈழக்குடும்பிகன் ஒருவன் ஆசாரியன் நெடுஞ்சாத்தான் என்பார்க்குப் பாளி சமைத்தளித்த செயலைக் பிராமிக்கல்வெட்டு கூறுகிறது. ஈழக்குடும்பிகன் என்பது இலங்கையைச் சேர்ந்த வாணிகனும் இல்லறத்தானுமாய ஒருவனைக் குறிக்குமென்பர். மற்றொரு கல்வெட்டு ஈழ வாணிகன் சாரிகன் என்பானைக் குறிக்கின்றது. இக்

குறிப்புக்கள் ஈழத்திலிருந்து தமிழகம் சென்று வணிகம் புரித்தவரின் சமய அறக்கொடைகளைக் காட்டுகின்றன. ஈழத்தையாண்ட எல்லாளனை திருவள்ளுவரின் மாணவனாகச் சிலர் கருதுவர். சங்கப் பாடல்களைப் பாடிய புலவருள் நாகன் எனப் பெயர் பெறும் ஆண்பாலர் பதினறுவரும் நாகை எனப்பெயர் பெறும் பெண்பாலர் இருவரும் ஈழத்திலிருந்த நாகர் குடிவந்த தமிழ் மக்களாதல் வேண்டுமென்பர் அறிஞர். முரஞ்சியூர் முடிநாகராயர் யாழ்ப்பாணத்து அரசர் குடியில் தோன்றியவர் என்னும் செய்தியையும் இங்கு சுட்டிக்காட்டலாம். இவ்வாறு பலசான்றுகள் மூலம் சங்ககாலத் தமிழகத்திற்கும் ஈழத்திற்குமிடையில் அரசியல், வணிகம், சமயம், கல்வி எனப் பல துறையிலும் தொடர்பு இருந்ததை அறியமுடிகிறது. (பாலசுப்பிரமணியன், கு.வெ., 1994), (கிருஷ்ணராசா, 1998:17-27)

**வரணியில் காணப்படும் சங்ககாலத்து எச்சங்கள்**

வரணிப் பிரதேசத்தில் அண்மைக்காலத்தில் எம்மால் செய்யப்பட்ட தொல்லியல் மேலாய்வுகளின் போது கிடைத்த பல சான்றுகள் சங்ககால தமிழகப் பண்பாட்டின் தாக்கம் இங்கு வெகுவாக இருந்ததை அறிய உதவுகின்றது. எமக்கு முன்பு பேராசிரியர் பொ.இரகுபதி, பேராசிரியர் ப.புஸ்பரட்ணம், பேராசிரியர் செ.கிருஷ்ணராசா போன்றவர்கள் செய்த ஆய்வுகளும் பல தகவல்களை வெளிக்கொண்டு வந்துள்ளன. வரணி இயற்றாலை கல்வளைப்பிள்ளையார் கோயிலிற்கு மேற்குப்புறமாக உள்ள இயற்றாலைக்கோட்டை மிகவும் முக்கியமானது. (Ragupathy,P., 1987:107 - 1014) இங்கு கிடைக்கும் செங்கற்கள் கந்தரோடையில் கிடைத்த அதே வகையானவை. இவை பெருங்கற்காலம், சங்ககாலம் என்பவற்றிற்குரியவை. அத்துடன் இக்கோட்டையிலிருந்து தமிழகத்திற்கும், உரோமா புரிக்குமிடையே வர்த்தகத் தொடர்புகள் இருந்தமை உறுதியாகிறது. இங்கே தாமரை வடிவ முட்டியிலிருந்து 700 வரையிலான உரோம நாணயங்கள் கண்டெடுக்கப்பட்டன. அவை கி.மு ஓராம் கி.பி ஓராம் நூற்றாண்டிற்குரியவை. ஓகஸ்ரசீசர் காலத்திற்குரியவை. மேலும் இக்கோட்டையின் வாசலில் இருப்பது கோட்டை வாசல் பிள்ளையார் எனப்பட்டதுடன் அங்கே மிகப்புராதனமான நாகர் வழிபாட்டின் தொன்மங்களையும், சுரங்கப்பாதை ஒன்று இருந்ததற்கான ஆதாரங்களையும் இப்போதும் அவதானிக்க முடிகின்றது. இக் கோட்டையைச் சூழ சிறு தெய்வ, காவல் தெய்வவழிபாடுகள் உண்டு. அதாவது ஐயனார், அண்ணமார், நாச்சிமார், வீரபத்திரர், பைரவர் எனப் பல தெய்வவழிபாடுகள் உண்டு. இங்கே நடைபெறும் வழிபாட்டு முறைகள் சங்ககாலத்து வழிபாட்டம்சங்களின் தொடர்ச்சியைக் காட்டி நிற்கின்றன. இந்த முறைமைகள் வரணிப் பிரதேசத்தின் ஏனைய பகுதிகளிலுள்ள சிறுதெய் வழிபாட்டிலும் தொடர்வதனை நாம் அவதானிக்கலாம். (கமலநாதன், சி.கா., 2012:76-81)

இக்கோட்டைவாசலின் தெற்காக ஒரு இடத்தில் பெருங்கற்காலம், சங்க காலத்திலிருந்தது போன்ற குத்துக் கல்வழிபாட்டம்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. அங்கே

செங்கல்லில் ‘‘ம’’ என்ற தமிழ் பிராமி வரிவடிவமும் கண்டுபிடிக்கப்பட்டது. அத்துடன் புராதன கிணறுகள், பானையோடுகள் போன்ற பலவும் சங்ககாலப் பண்பாட்டுடன் தொடர்புபடுகின்றன. சங்ககாலத்தில் பயன்படுத்தப்பட்டது போன்ற கூரை ஓடுகளும் அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டன. அத்துடன் இயற்றாலையில் மிகப்புராதன பாலூட்டும் விலங்கின் எச்சங்களும் கண்டுபிடிக்கப்பட்டு அவை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் ஒப்படைக்கப்பட்டன. (புஸ்பரட்ணம், ப., 2003)

கஜபாகு மன்னனால் ஈழத்திற்கு அறிமுகப்படுத்தப்பட்ட கண்ணகை வழிபாட்டின் ஓரம்சமாக ஐந்தாவதான இடமாக வரணி சிட்டிவேரம் கண்ணகை அம்பாள் ஆலயம் விளங்குகிறது. இவ்வாலயம் ஆதியில் அமைந்த சின்ன அம்மன் கோயிலடியில் பெருங்கற்காலப் பண்பாட்டிற்குரிய செங்கற்களும், தொல்லியற் சான்றுகளும் கிடைத்துள்ளன. அவ்விடம் மேலும் விரிவான தொல்லியலாய்வு செய்யப்பட வேண்டிய நிலையில் உள்ளது. இவ்வாலயத்தில் கோவலன் கண்ணகி ஏடு காலம் காலமாகப் பேணப்பட்டு வருவதும் பொங்கல் வழிபாட்டு முறைகளுடன் நடைபெறும் பாரம்பரிய மரபுகள் சங்ககாலத்தின் தொடர்ச்சியையே காட்டிநிற்கின்றன. இவ்வாலயத்திற்கு அண்மையிலுள்ள 33 அடி அகலமுடையதாக முன்பு இருந்த ராஜவீதி வணிகத் தொடர்புகளின் பிரதான வீதியாக இருந்துள்ளது. (கமலநாதன், சி.கா., 2012:128-152)

வரணி இடைக்குறிச்சிப் பகுதியில் மாவில் வயல் வெளியுள்ளது. அதில் மார்க்கண்ட செட்டிவயல் பகுதியில் சுடுமண்ணால் செய்யப்பட்ட கிணற்று வளையங்களும் கிணறுகளும் கண்டுபிடிக்கப்பட்டன. அத்துடன் முதுமக்கள் தாழியை ஒத்த பெரிய மண்பாண்டங்கள், வட்டில்கள் கண்டுபிடிக்கப்பட்டன. இவற்றை ஒத்த பல தொல்லியற் சான்றுகள் தமிழகத்திலே செய்யப்பட்ட தொல்லியல் ஆய்வுகளின் போது சங்ககாலத்திற்குரியவையாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளன (ஸ்ரீதரன், கி., 2018). இந்த வயல் பிரதேசம் குளங்களுடன் உள்ளன. அவை பெரியமாவில் சிறியமாவில் என அழைக்கப்படுகின்றன. அதனை அடுத்து குளத்துடன் பழுதனை வயல் வெளியும், நாச்சிமார் ஆலயமும் உண்டு. மேலும் 1974இல் வரணி வைத்தியசாலைக்கு முன்பாக விவசாயத்திணைக்களம் உரக்களஞ்சியம் அமைப்பதற்கு அடித்தளம் வெட்டிய போது மயில் வடிவத்தினாலான மண்ணால் செய்யப்பட்ட மிகப்பெரிய முதுமக்கள் தாழி கண்டுபிடிக்கப்பட்டது. இது உள்நாட்டு சிவில் யுத்தத்தின் போது மறைக்கப்பட்டு விட்டது. இதனால் இதைப்பற்றி விரிவாக ஆய்வு செய்யமுடியவில்லை. இதனை நேரடியாக அக்காலத்தில் சென்று அவதானித்த பேராசிரியர் செ.கிருஷ்ணராசா அவர்கள் ஆதிச்ச நல்லூரில் கண்டுபிடிக்கப்பட்டது போன்ற முதுமக்கள் தாழிப் பண்பாட்டைக் காட்டுவதாகவும் ஆனால் இதனைப் போன்ற வடிவம் தமிழகத்தில் கண்டுபிடிக்கப்படவில்லை அது ஈழத்திற்கேயுரிய தனித்துவத்தைக் காட்டுவதாகக் குறிப்பிட்டார். இவ்விடங்களில்

விரிவான தொல்லியலாய்வுகளை மேற்கொண்டால் மேலும் பல வரலாற்றுண்மைகள் வெளிப்படும் இவையெல்லாம் சங்ககாலப் பண்பாட்டின் தொடர்ச்சியைக் காட்டி நிற்பவை (ஸ்ரீதரன், கி., 2018).

இதே போல் வரணியில் தோம்புகளில் கண்டுபிடிக்கப்பட்ட இடப்பெயர்கள், (பாலசுந்தரம், இ., 1989) ஏடுகளை ஓலையில் எழுதிப் பாதுகாக்கும் மரபுகள், சைவசமய மரபுகள், புராணபடன மரபுகள் இறுக்கமாகக் கடைப்பிடிக்கும் தன்மை, உணவு நடைமுறைகள், பழக்கவழக்கங்கள், சடங்குகள், சைவக்குருமாரது தொன்மையான மரபுகள், விசகடிவைத்திய மரபின் தொன்மை, கல்விமரபு, கலை பண்பாட்டு மரபு என்பவையெல்லாம் சங்ககாலப் பண்பாட்டின் தொடர்ச்சியாக வரணியில் பின்பற்றப்பட்டு வருவதை இன்றும் அவதானிக்க முடிகிறது. (கமலநாதன், சி.கா., 2012), (Ragupathy,P., 1987)

## சங்ககாலப் பண்பாடுகளும் புராதன குருநாதர் கோயிலும்

வரணியில் சங்ககாலப் பண்பாடுகளை இன்றும் கடைப்பிடித்து வரும் ஆலயங்களில் மாசேரி, புராதன குருநாதர் கோயில் தனித்துவமான இடத்தை வகிக்கின்றது. இவ்வாலயம் ஈழத்தின் ஆதிக்குடிகளான நாகர் காலத்திலிருந்து வழிபடப்பட்டுவருவதை சான்றுகள் மூலம் அறிய முடிகின்றது. அத்துடன் சித்தர் மரபில் பரம்பரை பரம்பரையாக பூசித்து வரப்படுவதை அறிய முடிகின்றது. தற்போது கிடைக்கின்ற சான்றுகளின்படி ஆதிக்குருவாக நாகர் என்பவர் அறியப்படுகின்றார். (சின்னக்குட்டி, க., 1989.06.25), (நாகப்பர், க. 2013.08.10) இவர் அகத்தியர் மரபுடன் இணைத்துக் கூறப்படும் முறைமையுண்டு. அதாவது அகத்தியரது சீடர் போகர் என்றும் அவரது மூன்றாவது தலைமுறைக் குருவாக நாகர் கூறப்படுகிறார். இவர் பொதிய மலையிலிருந்து ஈழத்திற்கு அனுப்பப்பட்டதாகவும் அவர் ஈழத்திற்கு வந்து நாகர் மரபில் பூசிக்கப்பட்டு வந்த குருநாதர் கோயிலிற்கு அண்மையில் தொண்டமனாறு முள்ளியான் ஊடாகப் பாய்ந்து வரணிப்பிரதேசத்தால் நாகர்கோயில் குடாரப்பு, செம்பியன்பற்று, சுண்டிக்குளம் வரை பாயும் உப்பங்கழியாற்றுக்கரையில் தவம் செய்து வரணியில் சித்தர் மரபை அறிமுகப்படுத்தினார். அம்மரபில் வந்தவர்களே இன்றும் குருநாதர் கோயிலை பரம்பரை பரம்பரையாகப் பூசித்து வருவதையும் காணலாம். (காங்கேசு, கா., 2018.08.20) அந்த வகையிலே குருநாதர் கோயில் மரபில் ஸ்ரீலஸ்ரீ குருநாத நாகப்பசுவாமி மிகவும் முக்கியம் பெறுகிறார். பொதுவாக ஆண்களிற்கு நாகப்பர் எனப்பெயர் சூட்டுவதும் பெண்களிற்கு நாகம்மா எனப்பெயர் சூட்டுவதும் நீண்ட காலமாகப் பேணப்பட்டு வருவதையும் தற்காலம் வரை இருந்து வருவதனையும் அவதானிக்கலாம். (பாலசுப்பிரமணியன், கு.வெ., 1994), (கமலநாதன், சி.கா., 2012:154-172)

இந்த முறைமை நாகர் மரபுடன் தொடர்புபட்டு சங்ககாலப் பண்பாட்டுடன் இணைந்து செல்கிறது. இவ்வாலயத்தில் நாகவழிபாட்டு மரபு மிகவும் முக்கியம் பெறுகிறது. நாகதம்பிரானையே முதலில் வணங்கி வழிபாட்டைத் தொடர்வதும் பிள்ளையாருக்குரிய முதன்மையை நாகதம்பிரானுக்கு கொடுப்பதையும் காணலாம். மேலும் ஏடுகள் எழுதும் போது பிள்ளையார் சுழிக்குப் பதிலாக நாகதம்பிரானை வரைந்து எழுதத் தொடங்குவதும் மரபாக இருந்துள்ளது. இம்மரபு நாகர்கோயிலிலும் இருந்துள்ளதை ஆய்வின் போது கண்டறிந்தோம் மேலும் நாற்சார் வீடுகளிலும் ஏனைய வீடுகளிலும் முகட்டின் இருபக்கமும் நாகங்களைச் செய்து செருகிவைக்கும் முறையும் இருந்துள்ளது. அத்துடன் இவ்வாலயத்தில் புதிய மண்பானையில் பெரும்பொங்கலிற்கு பொங்கல் செய்து அதனை வெள்ளைச்சீலையால் கட்டிப் படையல் செய்யாது அப்படியே பானையுடன் நைவேத்தியம் செய்யும் மரபும் இருந்து வருகிறது. நாகதம்பிரான் வழிபாடு தனித்துவமாக இருப்பதுடன் மூலாலயத்திலும் எழுந்தருளி சுவாமிக்கும் இறைவனது உத்தரவின்படி ஐந்துதலை நாகம் படமெடுத்த நிலையில் இணைத்து வைத்தே வழிபாடு நடைபெற்றுவருகிறது. ஆலயத்தின் 500 வருடங்களிற்கு மேலாக நிற்கும் தலவிருட்சமான பூவரசில் நாகதம்பிரான் வசித்து வருவதனை இன்றும் காணமுடிகின்றது. சங்ககாலப் புலவர்கள் ஈழத்து நாகமரபினுடன் இணைந்துள்ளதை பல ஆய்வாளர்கள் எடுத்துக் கூறியுள்ளனர் (பாலசுப்பிரமணியன், கு.வெ., 1994), (கிருஷ்ணராசா,செ., 1998:17-27).

இவ்வாலயத்தின் தீர்த்தத்தின் நாமமும் சிவசண்முகநாக தீர்த்தம் என்றுள்ளதையும் அவதானிக்கலாம். மேலும் இங்கு அமைந்துள்ள நாகப்பசுவாமி சமாதியில் நாகதோஷம் நீக்கி திருமணம் ஒப்பேறுவதும் பிள்ளைப்பாக்கியம் கிடைப்பதும் காலம் காலமாக நிகழ்ந்து வருகின்றது. மேலும் இவ்வாலயம் ஆதியிலிருந்ததாகக் கருதப்படும் தற்போது மடம் உள்ள இடத்தில் இவ்வாலயத்தின் புராதன பொக்கிஷங்கள் பெட்டகத்தினுள் வைத்துப் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. அவற்றை இன்றும் நாகங்கள் பாதுகாத்து வருவதைக் காணலாம். அவை வெளிப்பட்டுப் பக்தருக்குக் காட்சி கொடுப்பதை அடிக்கடி காணலாம். இவையெல்லாம் நாகமரபின் தொடர்ச்சியைக் காட்டி நிற்கின்றன. இந்த மடம் உள்ள புராதன இடத்தில் ஆதியில் கோயில் இருந்தமைக்கான எச்சங்கள் நிலத்தைத் தோண்டும்போது கிடைத்தன. அவற்றின் முக்கியமான புராதன கோயிலின் முருகைக் கல்லால் செய்யப்பட்ட கோமுகை, மண்ணில் செய்யப்பட்ட அகல்விளக்கு 1.5cm நீளமும் 1cm அகலமும் கொண்ட செங்கற்கள் பானை, வட்டில்களின் ஓடுகள் கிடைத்தன. இவை பெருங்கற்கால சங்ககாலப் பண்பாட்டைத் பிரதிபலித்து நிற்கின்றன (ஸ்ரீதரன், கி., 2018).

இவ்வாலயம் பரம்பரையாகப் பூசித்து தர்மகர்த்தாவாக இருப்பவர்களை மயிலிட்டி என்று அழைப்பர். அதாவது மயிலை குலமரபு சின்னமாகக் கொண்டவர்கள் என்பது இதன் பொருளாகும். மயில் முருகனது பிரதான வாகனமாகவும் சின்னமாகவும் விளங்குவதைக்

காணலாம். மேலும் இம்மரபில் வந்த பெண்களிற்கு மயிலாத்தை என்ற நாமத்தை மாறிமாறிச் சூட்டி வந்ததனை அவதானிக்கலாம். பட்டி என்று பெயர்சூட்டுவது தமிழ் நாட்டில் சங்ககாலத்திலிருந்து வருவது பல ஊர்களிற்கு இப்பெயருண்டு உதாரணம் பிள்ளையார்பட்டி என்பதைக் குறிப்பிடலாம். இவ்வலாயத்தை மயிலாத்தைப் பேத்தி என்ற பெண்ணும் பூசைகள் செய்து வந்துள்ளதை ஆதாரங்கள் மூலம் அறிய முடிகின்றது. அவர் சந்ததி பெருக வேண்டும் என்றும் பெரும் பொங்கலிற்கு பண்டம் எடுக்கத் தொண்டர்கள் வேண்டும் என்றும் பிரார்த்தனை செய்து குருநாதருக்கு முள்ளு மிதிவடி எடுத்ததாகவும் கூறப்படுகிறது. அதன்பின் அவருடைய இரு பெண்பிள்ளைகளிற்கு தலா ஒன்பது பெண்பிள்ளைகள் பிறந்து சந்ததி பெருகியதாகக் கூறுவர். அந்தமரபினர் இன்றும் உள்ளனர். (சின்னக்குட்டி, க., 1989.06.25), (நாகப்பர், க., 2013.08.10), (காங்கேசு, கா., 2018.08.20)

குருநாதர் கோயிலில் இருமரபினர் முக்கியம் பெறுகின்றனர். ஒன்று பிரதம பூசகர், பரம்பரைத் தர்மகர்த்தா பணிசெய்பவர்கள் இவர்கள் ஆண் வழிவந்த சந்ததியினராக உள்ளனர். மற்றையது குருநாதர்கலை கொண்டு ஆடுபவர்கள். இவர்களை சிவகலைப் பூசகர் என்று குறிப்பிடுவர். இவர்கள் மருமக்கட்தாய முறையில் தாய்வழி மரபில் வந்தவர்களாகும். ஆனால் எல்லோரும் மயிலிபட்டி மரபினரேயாகும். இதில் ஒருவருக்கு ஆசௌசம் (துடக்கு) வரும் போது மற்றவருக்கு வராது. எனவே ஒரு காலத்திலும் இவ்வாலயத்தில் பூசை மரபு மாறுவது கிடையாது. மரபு மாறிப் பூசை செய்ய குருநாதர் சம்மதிப்பதும் கிடையாது. இங்கே தாய்வழிமரபு மிகவும் முக்கியம் பெறுகிறது. இது சங்ககாலத் தமிழ்ப் பண்பாட்டை இன்று காட்டி நிற்கின்றது. (சங்க இலக்கிய கட்டுரை, 1984), (சாலினி இளந்திரையன், 1995)

இதுவரை காலமும் பூசை செய்தவர்கள், சிவகலைகொள்பவர்களாக நாகர், வேலர், தாமர், மயிலாத்தை, வேலாயுதர், நாகப்பர் (பெரிய), நாகப்பர் (சின்ன) கந்தர், சின்னக்குட்டி, கமலநாதன் என்ற வகையில் பெயர்கள் அறியப்படுகின்றன. இவை ஈழத்துத் தொல்குடி மரபின் தொடர்பை விளக்கி நிற்பதனையும் அவதானிக்கலாம். இவர்கள் சித்தர் மரபில் வந்தவர்களாகக் கருதப்படுகிறார்கள். இதனால் அவர்களின் பெயரின் முன்பு ஸ்ரீலஸ்ரீ குருநாத என்ற அடைமொழியும் பின்பு சுவாமிகள் என்பதும் சேர்த்து பயன்படுத்தப்படுகிறது. அவ்வகையில் ஸ்ரீலஸ்ரீ குருநாதநாகர் சுவாமிகள் என்று பயன்படுத்துவதனை அவதானிக்கலாம். ஆலயத்தின் உள்வீதியிலே ஈசானதிசையில் இவர்களிற்குச் சமாதி லிங்கங்கள் வைக்கப்பட்டுள்ளன. குருநாதர் தரிசனத்தில் ‘‘சிற்பியால் செய்யப்படாத சுயம்புலிங்கம் வைக்க வேண்டும் எனவும் சதுர ஆவுடையார் செய்யப்பட வேண்டும்’’ என்ற வாக்கிற்கேற்ப காசியில் கங்கையிலிருந்தும் கதிர்காமத்தில் மாணிக்ககங்கையில் இருந்தும் எடுக்கப்பட்ட சுயம்புலிங்கங்களே பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளன. மிகப்புராதன தலங்களின் சிவலிங்கத்தின் ஆவுடையாரும், எல்லாளன், இராவணன், சித்தர்கள் வழிபட்ட சிவலிங்கங்களின்

ஆவுடையார்கள் சதுரமாக விளங்குவதையும் தொல்லியலாய்வின் போது கண்டுள்ளோம். சங்ககாலத்தில் மரத்தால் செய்யப்பட்ட தறியில் சிவலிங்க வழிபாடும் அத்தன்மைப்பட்டதை இவ்விடத்தில் சுட்டிக் காட்டலாம். இவ்வாலயத்தில் குருநாதருடைய தரிசனத்திற்கேற்ப வெள்ளியால் செய்யப்பட்ட புராதனமான திருமுகம் உண்டு. அதனை விசேட தினங்களில் (பெரும்பொங்கல், ஆடிஅமாவாசை, கார்த்திகை பரணிப்பூசை) மரத்தில் செய்யப்பட்ட தறியில் அந்த முகத்தைச் செருகி அதற்கு அலங்காரம் செய்து விசேட பூசைகள் நடைபெறும். இம்மரபும் சங்ககால வரலாற்றின் தொடர்ச்சியாகும்.

**சமாதிக்கோயில்**

குருநாதர் கோயிலானது சமாதியுடன் இணைந்த கோயிலாக விளங்குகின்றது. தற்போது இரண்டு சமாதிகள் உள்ளன. ஆலயத்தின் வடக்காக 500m தூரத்தில் அவை உள்ளன. சில நூற்றாண்டுகளின் முன்னர் சிவகலைப் பூசகராக இருந்தவர் நாகப்ப சுவாமிகளாகும். இவர் மிகச் சிறந்த சித்தராக மயிலிபட்டி பரம்பரையில் வந்தவராக விளங்கினார். அட்டமா சித்திகள் கைவரப்பெற்றவராகவும் சோதிடம், சாத்திரம், மருத்துவம், வாக்குகூறல், இலக்கணம், இலக்கியம் எல்லாவற்றிலும் கைவரப்பெற்றவராக விளங்கினார். குருநாதர் மற்றும் பரிவார தெய்வங்களில் மிகுந்த பக்தியுடையவராக இருந்தார். பல அற்புதங்களைச் செய்திருந்தார். மருந்து காய்ச்சும் மண்பானையில் கையால் அதனைத் துளாவுதல், திடீரென பானையின் உச்சியில் சென்று கையை விட்டு ஆடுதல், சரியாக வாக்கு கூறல், மாறாத நோய்களையும் மாற்றுதல், பொங்கலின் போது வழிவெட்டிய பின் கச்சை மலையேறப் போகிறது காலிற்கு நீர் ஊற்றுமாறு கூறுதல். அவ்வேளை சூலம் பிரம்புடன் வானில் பறந்து கதிர்காமத்திற்கு செல்லல் தரையால் நடந்து புறப்பட்டாலும் 3ம் நாள் கதிர்காமத்தில் நிற்கும் அதிசயம், மற்றும் ஒருமுறை அடியன் சிதம்பரநாதன் என்ற உடையார் வாக்கு கூறுவது உண்மையோ எனப் பரிசோதிக்க பெரும் பொங்கல் வேளையில் கையைப் பொத்தி அதற்குள் என்ன இருக்கு எனக்கேட்டமை. அப்போது அவர் கோயிலின் உட்சென்று வந்து வாயால் கூறாமல் காதினைப் பிடித்து கடுக்கன் உள்ளே இருக்கு எனக் கூறி கையைத் திறக்குமாறு கூறிய வேளை அவரது கைவெடித்து இரத்தம் பாய்ந்தது. “வீட்டேபோ மிகுதி காண்பாய்” எனக்கூறி அனுப்பியமை வீட்டில் அக்காலத்தில் மிகப்பெறுமதியான ஒரு வடக்கன் எருது இறந்துவிட்டது. மற்றையது இறக்க இருந்தவேளை உடையார் ஓடிவந்து காலில் விழுந்து மன்றாடியதாகவும் விபூதியைக் கொடுத்துத் தலையில் குட்டு, எழும்பும் என்று கூறியனுப்பினார். மற்றவடக்கன் எருது தப்பியது இதன் பின் யாரும் கோயிலில் சோதிப்பது கிடையாது.

இவர் சமாதியடைய முன்பு ஆனிமாத பெரும் பொங்கலின் போதே திருக்கார்த்திகை விளக்கீடு அன்று நேரம் குறிப்பிட்டு சமாதியடைவேன் எனக் கூறியிருந்தார். அத்துடன் அன்றைய தினம் சாணகம் மெழுகி நிறைகுடம் வைக்குமாறு கூறி முருகன் பாடல்களைப்

பாடும் படி கூறிச் சோறு குழைத்து எல்லோருக்கும் கொடுத்து உண்ண வைத்து யாத்திரையை விட அன்னதானமே சிறந்தது எனக்கூறி தன்னைக் கோயிலின் ஈசான மூலையில் சமாதி செய்யும்படி அருட்கட்டளையிட்டார். இவர் குறிப்பிட்ட தினத்தில் சிரசு வெடித்து ஜீவன் முத்தியடைந்ததாகக் கூறப்படுகிறது. அதேவேளை தனது இருமகள்மாரை அழைத்து ஒருவருக்குப் பெண்பிள்ளை பிறக்கும் என்றும் அவருக்கு கற்பகம் என்று பெயர்சூட்டுமாறும் மற்றவருக்கு ஆண்பிள்ளை பிறக்கும், அவருக்கு எனது பெயரை சூட்டுமாறு கூறித் தனது சித்தையும் கொடுத்தார். அவ்வாறே நடந்தது. அவரைச் சின்ன நாகப்பசுவாமி என்பர். அவரது சமாதியும் இவரது சமாதிக்கு அண்மையில் உண்டு. கார்த்திகை மாதம் அதிகமான நீர்நின்றதால் சமாதி செய்வது எப்படி என விளங்காத மக்கள் நேரே வடக்காக உயரமாக இருந்த இடத்தில் சமாதியைச் செய்து அலரியை அடையாளத்திற்கு நட்டு வைத்தனர். பின்பு சிவலிங்க வடிவில் வெள்ளைபுற்று எழுந்துள்ளது. அதனுள் நல்ல நாகம் எப்போதும் இருக்கிறது. இந்த சமாதி வழிபாடும் சங்ககால நடுகல் வழிபாட்டின் தொடர்ச்சியாக விளங்குவதைக் காணலாம். (ஸ்ரீதரன், கி., 2018), (சின்னக்குட்டி, க., 1989) அவர் கூறிய இடத்தில் சமாதிலிங்கம் வைத்துத் தற்போது வழிபடப்பட்டு வருகிறது.

## குருநாதர் கோயில் வழிபாட்டு முறைகளும் சங்ககாலப் பண்பாடும்

குருநாதர் கோயில் மூலாலயத்தில் விக்கிரகம் கிடையாது. குருநாதர் தான் சிற்பியின் கைக்குள் அடங்கமாட்டேன், என் பூரண கலைகளைச் சிவனாரைத் தவிர வேறு எவரும் முழுமையாக அறிய முடியாது எனவே முன்னோர் பூசித்த சங்கையே நடுவில் வைத்து வலது பக்கம் வச்சிரவேலும் இடது பக்கம் திரிசூலமும் வைத்துப் பூசிக்குமாறு கூறியதற்கேற்பவே மூலஸ்தானம் உள்ளது. இதனால் துவிதள தூபியில் சிற்பங்கள் எதுவும் அமைக்கப்படாது நிறைகுடம் வைக்கப்பட்டு மடாலயத் தன்மையிலேயே உள்ளது. மூலாலயத்தில் தந்தைக்கு உபதேசம் செய்த நிலையில் சிவனாருடன் குருநாதர் எழுந்தருளியுள்ளார். 21 பரிவாரத் தெய்வங்கள் சூழ உள்ளனர். குருநாதர் கணபதி, குருநாதர், சிவபெருமான், நாகதம்பிரான், தண்டேஸ்வரர், துர்க்கை, கண்ணகை, மகாலக்ஷ்மி, ஐயனார், முத்துமாரி, வீரபத்திரர், பத்திரகாளி, காத்தவராயர், கறுப்பர், காடேறி, நரசிங்க பைரவர், இளந்தாரி பைரவர், நாச்சிமார், ஒற்றைக்கால் பைரவர், காளமாமுனீஸ்வரன், ஆஞ்சநேயர், காவல்பைரவர் என்போர் முக்கியமானவர்கள், இவற்றுடன் மாணிக்கப்பிள்ளையார், கதிரவேல்சுவாமி, பெரியபுராண லிங்கம், சமாதி லிங்கங்களும் உள்ளன. சில தெய்வங்கள் தமது பெயரை வெளிப்படுத்த வேண்டாம் எனக் கூறியுள்ளதால் அடுத்த சந்ததிக்குரியவருக்கு காதினுள் மட்டும் உபதேசிக்கப்படும் இவ்வகையில் பரிவார சந்நிதிகளை அதிகமாகக் கொண்ட கோயிலாக விளங்குகிறது.

இவ்வாலயமானது பத்ததி முறைப்பட்ட கோயிலாக உள்ளது. புராதன காலத்திலிருந்து ஏடுகளிலே ஒவ்வொரு தெய்வத்திற்குரிய மந்திரங்கள் தமிழால் எழுதப்பட்டு அதற்குரிய யந்திரம், பூசை முறைகளுடன் பரம்பரையாகப் பேணப்பட்டு வருகிறது. ஆலயக் கணக்குகள் தகவல்கள் கூட ஏடுகளில் எழுதியே வைக்கப்பட்டுள்ளன. இவ்வாலயப் பொங்கல் முறைகள் பாரம்பரியம் மாறாமல் இன்றுவரை பின்பற்றப்பட்டு வருகின்றன. தென்மராட்சியிலுள்ள கோயில்கள் எல்லாவற்றினுடைய பொங்கல் நிறைவு பெற்றதும், ஆடி பிறப்பதற்கு முன்பு ஆனிக்கடைசி வெள்ளிக்கிழமையை அடிப்படையாகக் கொண்டு பெரும்பொங்கல் நடைபெறுகின்றது. சங்ககால வேலன் வழிபாட்டின் பண்பாட்டுக் கூறுகளை இன்றும் காணலாம். (சண்முகம்பிள்ளை, எம்., 1998) ஆனி மாத இறுதி வெள்ளிக்கிழமைக்கு முன்வரும் வெள்ளிக்கிழமை விளக்கு வைத்தல் நடைபெறும். அன்று பரிகலங்களை வெளியில் உலாவ விடப்படும். அடுத்தநாள் சனிக்கிழமை ஊர்த் தண்டல் இடம்பெறும். முன்னைய காலங்களில் கொடிகாமம் குடத்தனை ஈறாக தண்டப்பட்டதை அறிய முடிகின்றது. தண்டலின் போது கிடைக்கும் நெல்லினை மடத்தில் அவித்துத் காயவைத்து அதிலிருந்து வரும் அரிசியைக் கொண்டு அவிக்கப்படும் சோறு படையலிற்கு எடுக்கப்படும். அதே போல் ஓடியல், தேங்காய், மிளகாய், போன்ற பொருட்களும் தண்டலின்போது கிடைக்கும். ஊரவர் எல்லோரும் கூடி இதனைத் தயார் செய்வார்கள். படையலுக்காக 150 வரையிலான ஒடியல்பிட்டு, குரக்கன் பிட்டு, தவிட்டுப்பிட்டு தயார்செய்யப்படும். விளக்கு வைத்த பின்பு ஊரில் நன்மைக்காரியம் எதுவும் செய்வதில்லை. தட்டிக்கழித்துச் செய்த காலத்தில் உயிர்ச் சேதங்கள் நடைபெற்ற தற்கும் சான்றுகள் உண்டு.

வியாழக்கிழமை மாட்டு வண்டிலிலே ஐயனாருக்குச் சூலம் நேர்ந்து பண்டமெடுப்பதற்கு சந்தைக்குப் புறப்படுவார்கள். முன்பு சாவகச்சேரி சந்தையிலிருந்து பண்டம் எடுக்கப்பட்டது. தற்போது கொடிகாமத்திலிருந்து எடுக்கப்படுகிறது. பரிகலங்களை ஒவ்வொரு கோயிலிருந்து அழைத்து வருதல் பண்டமரவடி பூசைகள், அங்கு கொடுக்கப்படும் அன்னதானம், பூசைமுறைகள் பாரம்பரியச் சிறப்புடையவை. வெள்ளிக்கிழமை கோயில் பூசைகளும், மாலையில் பண்ட மரவடியில் நடைபெறும் பூசைமுறைகளும் புராதன மரபுகளின்படி பேணப்படுகின்றன. பூசகருக்கும், கலையாடுபவருக்கும் உள்ள ஆடைகள், பூட்டுக்காப்பு, உருத்திராட்சம் என்பவை மிக நீண்டகாலமாக பாரம்பரியமாகப் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. அவற்றை நேர்ந்து அணியும் முறைமை, தெய்வங்களிற்குரிய ஆயுதங்கள் என்பன மிகவும் புராதனமும் பாரம்பரியமும் உடையவை. முதலில் வேல் செல்ல ஏனைய பரிவாரங்கள் பின்செல்லும் முறைமை சங்ககாலப் பண்பாட்டின் தொடர்ச்சியைக் காட்டி நிற்கின்றது.

சங்ககாலத்தில் திரைச்சீலைக்கு செய்யும் வழிபாட்டு மரபு இவ்வாலயத்திலும் தொன்றுதொட்டு பின்பற்றப்பட்டு வருகிறது. (வையாபுரிப்பிள்ளை,எஸ்., 1967) தற்போதுள்ள

முருகன் திரைச்சீலை செம்மறியாட்டுடன் பரிவாரங்கள் நிற்கின்ற நிலையிலுள்ளது. காத்தவராயர் சந்நிதியில் கட்டப்படும் திரைச்சீலை விநாயகர், இந்திராதி தேவர்கள் உட்பட கோயிலிலுள்ள எல்லாப் பரிவாரத் தெய்வங்களும் வரிசையாக வரும்நிலையில் வரையப்பட் டுள்ளது. இது இறைவனால் தியானத்தில் காட்சிப்படுத்தப்பட்டு வரையப்பட்டதாக முன்னோர்கள் கூறுவர். முன்பு இருந்த திரைச்சீலையைப் பார்த்துக் கடுக்காய் சாயத்தால் வரையப்பட்ட திரைச்சீலை தற்போது உண்டு. இது 450 வருடங்களிற்கு முன்பு நாயக்கர் காலத்தில் வரையப்பட்டதாகப் பேராசிரியர் செ.கிருஷ்ணராசா அவர்கள் குறிப்பிட்டுள்ளார். (கமலநாதன்,சி.கா., 2012) வருடத்தில் ஒருமுறை பெரும் பொங்கல் வழிபாட்டின் போதே இதனைக்கட்டி படையல் செய்யப்படும். இதன் முன்பு செய்யப்படும் சோற்றுப்படையல் பெருங்கற்கால, சங்க காலப் பண்பாட்டை அப்படியே பிரதிபலித்து நிற்கின்றன. (Sittrampalam, S.K., 1980) 150 வரையிலான ஒடியல்பிட்டு மற்றும் குரக்கன் பிட்டு, தவிட்டுப்பிட்டு, எள்ளுப்பாகு, பாரம்பரிய முறைப்படி அவிக்கப்படும் பூசணிக்காய்த் துண்டு நான்கு கீறு மூள்விழாத கத்தரிக்காய், இருதுண்ட நீள வாழைக்காய்ப் படையல் என்பன தனித்துவமுடையன. பைரவருடைய புராதன திரைச்சீலை ஓவியமும் தனியாக உண்டு. இதே போல ஐயனார் சூலம் கோயிலின் மத்தியில் நாட்டப்பட்டு நடைபெறும் கத்திமடை, சமாதிக்கு சென்று வந்து கத்திநேரும் முறைமை, சிவகலை கொள்பவரை அபிடேகம் செய்து குருநாதரைக் கலைகொள்ளச் செய்தல், மயிலிபட்டி சந்ததியில் 16 ஆண்களையும் 05 பெண்களையும் எடுத்துவிட்டு வேல் பெருமான் முன் எழுந்தருள 21 பரிவாரங்களும் கோயிலை வலம்வருதல், ஆடு, கோழிகள் நேர்ந்து விடுதல், காட்டுக்குள் சென்று பரிகலம் வழிவிடல் காடேறி வழிபாடு, காட்டுப்படையலை எடுக்காது விட்டு வருதல், பரிகலங்கள் கதிர்காமம் சென்று தீர்த்தமாடி வருதல் என்ற நம்பிக்கைகள் தொன்மையான சங்ககாலப் பண்பாட்டின் தொடர்ச்சியையே காட்டி நிற்கின்றன.

இக்கோயிலில் புராதன சிலம்பு, அம்மன் காய் என்பன உண்டு. கண்ணகை வழிபாடு முறையாகப் பின்பற்றப்படுகிறது. இங்குள்ள கண்ணகைக்கும் சிட்டிவேரம் கண்ணகைக்கும் பூர்வீகத் தொடர்புகள் உள்ளன. சித்தர்மரபு இன்றும் பேணப்படுவதுடன் அருள்வாக்கு கூறுதல் தீராத நோய்களை நீக்குதல் இன்றும் இடம்பெற்று வருகிறது. மரபுகள் மாற்றுவதற்கு குருநாதர் சம்மதிப்பதில்லை பூசகர்கள் தமிழால் பாரம்பரிய முறைப்படி பூசைசெய்து வருகின்றனர்.

**முடிவுரை**

தமிழகத்திற்கும் ஈழத்திற்குமிடையிலான பண்பாட்டுறவுகள் மிகத் தொன்மையானவை மேற்குறிப்பிட்ட வகையிலே வரணியானது இத்தொடர்பில் தனித்துவமான இடத்தைப் பெறுவதை அவதானிக்கலாம். குறிப்பாக, பெருங்கற்கால, சங்ககாலப் பண்பாடுகளை வரணி, மாசேரி புராதன குருநாதர் கோயில் காலம் காலமாகப் பேணிவருவதை இவ்வாய்வின் மூலம்

தெளிவாக அறியமுடிகிறது. மேலும் இத்தொடர்பு நீண்ட பரிணாமம் உடையதை அவதானிக்கலாம். இவ்வாலயத்தில் 50ற்கு மேற்பட்ட வெள்ளிவேலை வாழைக்காயில் மயில்தோகை விரித்திருப்பது போல நாட்டி வழிபடுகின்றனர். அவற்றுள் கூர்நீளமானவை பல்லவர் காலத்திற்குரிய வேல்களாகும். மாசேரி என்ற இடப்பெயர், ஆதியில் கோயில் இருந்த இடத்தில் சோழர் நாணயம் கிடைத்தமை, இவ்வாலயத்தை வேளைக்காரப்படையும் பூசித்ததைக் குறிக்கும் சோழன் மாசேரி, வேளையார்புலம் எனும் இடப்பெயர்கள், கோயிலுள்ள புராதன வெண்கலசோழர் காலச் செம்பு போன்றவை சோழர் காலத்திலும் இவ்வாலயம் பிரசித்தி பெற்றுள்ளதைத் தெளிவாக உறுதிப்படுத்துகின்றன. நாயக்கர் மரபில் இவ்வாலயம் பிரசித்தி பெற்றதை அக்காலத்தில் வரையப்பெற்ற திரைச்சீலை ஓவியம் சான்றாதாரத்துடன் விளக்கி நிற்கிறது. மேலும் வரணிக்கும் வேதாரண்யத்திற்குமான தொடர்பும், சரபோஜி மகாராஜா காலத்தில் தில்லைநாயக தம்பிரானால் வரணி ஆதீன உருவாக்கமும், சிதம்பரத்தில் வரணி மடம் உருவானமை, வரணியில் சிதம்பரத்திற்கு 2000 பரப்பிற்குக் கூடிய வயல் நிலங்கள் இருந்தமை போன்ற வரலாற்றுப் பதிவுகள் காலத்திற்குக் காலம் தமிழகத்திற்கும் இலங்கைக்கும் இடையிலான தொடர்பு விரிவடைந்தமையைக் காட்டுகின்றது. எனவே புராதன குருநாதர் கோயில் பெருங்கற்காலம், சங்ககாலம், சங்கமருவிய காலம், பல்லவர்காலம், சோழர்காலம், நாயக்கர் காலம், ஐரோப்பியர் காலம் என எல்லாக் காலங்களிலும் தமிழக ஈழ உறவில் முக்கியம் பெற்றதுடன் இன்றுவரை சங்ககால, நாகமரபுகளைப் பேணி வருகின்றது என்றால் அதுமிகையன்று. எனவே தமிழக இலங்கைப் பண்பாட்டு உறவில் வரணி மாசேரி புராதன குருநாதர் கோயில் தனித்துவமான ஓர் இடத்தைப் பெறுவதைக் காணலாம்.

## உசாத்துணை

இந்திரபாலா, கா., (2006), இலங்கையில் தமிழர், குமரன் புத்தக இல்லம், சென்னை, கொழும்பு.

இரகுபதி, பொ., (1983), பெருங்கற்கால யாழ்ப்பாணம், தெல்லிப்பழை.

இராகவன்,அ., (1980), ஆதித்த நல்லூரும் பொருளைவெளி நாகரிகமும், திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்பு கழகம்.

கமலநாதன், சி.கா., (2012), வரணியின் மரபுரிமைகள், பாகம் I, புராதன குருநாதர் கோயில் வெளியீடு, மாசேரி, வரணி.

கணபதிப்பிள்ளை, க., (1956), இலங்கைவாழ் தமிழர் வரலாறு, பேராதனை.

கணபதிப்பிள்ளை, க., (1962), ஈழத்து வாழ்வும் வளமும், சென்னை பாரியநிலையம்.

காங்கேசு, கா.,(83வயது) (2018.08.20), நேர்காணல் தரவுகள், வரணி வடக்கு.

கிருஷ்ணராசா, செ., (1993.08.01), பண்பாட்டுப் பாரம்பரியம் ஒன்றின் வளர்ச்சி, வீரகேசரி.

கிருஷ்ணராசா, செ., (1998), தொல்லியலும் யாழ்ப்பாணத் தமிழர் பண்பாட்டுத் தொன்மையும், பிறைநிலா வெளியீடு, யாழ்ப்பாணம்.

கிருஷ்ணராசா,செ., (2015), தொல்லியலும் வடமராட்சியின் பண்பாட்டுத் தொன்மையும், பிறநிலா வெளியீட்டகம் கோட்டாவில்.

சங்க இலக்கியக் கட்டுரைகள், (1984), தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

சண்முகதாஸ், அ., (தொகுப்பாசிரியர்) (2002), சங்க இலக்கிய ஆய்வுகள், க.கைலாசபதி நினைவுக் கருத்தரங்குக் கட்டுரைகள், தேசிய கலை இலக்கியப் பேரவை.

சண்முகம்பிள்ளை, எம்., (1998), சங்க இலக்கியங்களில் முருகன் பழங்குடி இன வெறியாட்டு வழிபாடு, (1998.12.30) திகதிகளில் சென்னையில் நடைபெற்ற ஸ்கந்த முருகன் முதலாம் கருத்தரங்கில் வெளியிடப்பட்டது. Munugan. org / tamil / Shanmugampillai. htm.

வையாபுரிப்பிள்ளை, எஸ்., (ப.ஆ) (1967), சங்க இலக்கியம், (இரண்டு தொகுதிகள்), பாரிநிலையம், சென்னை.

சாலினி, இளந்திரையன், (1995), சங்கத்தமிழரின் மனிதநேய மணிநெறிகள், உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், தரமணி, சென்னை.

சின்னக்குட்டி, க., (89 வயது) (குருநாதர்கோயில் பரம்பரை தர்மகர்த்தா, பிரதம பூசகர்) 1989.06.25ல் இவருடன் நேர்காணல் செய்து பெறப்பட்ட தகவல்கள், மாசேரி, வரணி.

சுப்பிரமணியன், தி., (2009), தமிழகத் தொல்லியலும் வரலாறும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி)லிட், அம்பத்தூர், சென்னை.

பத்மநாதன்,சி.,(ப.ஆ) 2007, சங்க இலக்கியமும் சமூகமும், இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம்.

பக்தவத்சல பாரதி, (2013), வரலாற்று மானிடவியல், புதுச்சேரி மொழியில் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனம், புதுச்சேரி.

பாலசுந்தரம், இ., (1989), இலங்கை இடப்பெயராய்வு - 2 (வடமராட்சி, தென்மராட்சி), வல்லிபுரம் இந்து கல்வி கலாசார மன்ற வெளியீடு.

பாலசுப்பிரமணியன், கு.வெ., (1994), சங்க இலக்கியத்தில் சமூக அமைப்புக்கள், முதற்பதிப்பு, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

புஷ்பரட்ணம், ப., (2003), (இரண்டாம் பதிப்பு), தொல்லியல் நோக்கில் இலங்கைத் தமிழர் பண்பாடு, பவாணி பதிப்பகம், புத்தூர்கிழக்கு, யாழ்ப்பாணம்.

நாகப்பர், க., (90 வயது) (ஸ்ரீலஸ்ரீ குருநாத நாகப்பசுவாமியின் பரம்பரையில் வந்தவர்), 2013.08.10. இவருடன் நேர்காணல் செய்து பெறப்பட்ட தகவல்கள், இடைக்குறிச்சி, வரணி.

ஸ்ரீதரன், கி., (2018), தொல்லியல் நோக்கில், நாம் தமிழர் பதிப்பகம், சென்னை.

Ragupathy, P., (1987), Early Settlements in Jaffna An Archaealogical Survery, Madras.

Sittrampalam, S.K., (1980), The megalithic Culture in Srilanka, (Poona)